விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 246 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 05 செவ்வாய்க்கிழமை (22.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## மன்னாரில் வீதி விபத்து
### இளைஞன் பலி

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் மன்னார் வீதி, கட்டுக்காரன் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. 15

## தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பௌத்த மதம் பாதுகாப்பாக இருந்தது
### வடக்கு, கிழக்கு பிரதம சங்கநாயக்கர்



(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை. மாறாக பாதுகாப்பே இருந்தது.

அதற்குக் காரணம், காவி உடைக்கு தந்த மரியாதை என வடக்குக்கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம் பலா கஸ்வெள விமலசார நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத 15

# ரணில் அரசை விரட்டுவோம்
### ஜே.வி.பி தலைவர் அநுர குமார



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அவர் தலைமையிலான மொட்டு அரசையும் ஓட ஓட விரட்டியடிப்போம். அந்த நாள் நெருங்கி வருகின்றது. மக்கள் படை எமது பக்கமே நிற்கின்றது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)


நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள இறைவரி சட்டமூலத்துக்கு எதிராக
### உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில், முன்வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதி ஆய்வாளரும் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய செயற்பாட்டாளருமான சத்துரங்க அபேசிங்கவினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

உத்தேச சட்டமூலத்தின் ஊடாக 02

## கிளிநொச்சியில் விபத்து; ஆசிரியை உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த விபத்து இம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் உப அதிபரும் பிர 15

## வெப்பமான காலநிலை
### மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களுக்கான வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங் 15

## குப்பைக்குள் வீசப்பட்ட 8 பவுண் நகைகள்
### உரிமையாளரிடம் ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் குப்பைக்குள் வீசப்பட்ட 8 பவுண் தங்க நகைகள் சுகாதாரப் பகுதியினரால் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி மண்டுவில் வட்டாரத்தில் வேலுப்பிள்ளை வீதியில் 15

## சண்டிலிப்பாயில் வன்முறை கும்பல் வீடு புகுந்து அட்டூழியம்
### பெற்றோல் குண்டுத் தாக்குதல் மோ.சைக்கிள் தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாய் பகுதியில் வீடு புகுந்து வன்முறை கும்பல் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அராலி மத்தி பகுதியில் வீடு ஒன்று எரிந்து நாசம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மத்தி பகுதியில் உள்ள வீடு ஒன்று நேற்று தீயில் முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த 2 அலுமாரிகள், 5 கதிரைகள், ஒரு தொலைக்காட்சி பெட்டி, ஒரு துவிச்சக்கர வண்டி, ஒரு மேசை, உடைகள், ஒலிபெருக்கி சாதனங்கள், ஒன்றரை பவுண் தங்க ஆபரணங்கள், ஒரு தொகை பணம் உள்ளிட்ட வீடு தளபாடங்கள் என்பன இதன்போது தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

வீட்டின் உரிமையாளர் வேலைக்கு சென்றிருந்த நிலையில் அவர்து மனைவி சமையலை முடித்துவிட்டு, அருகில் உள்ள கணவனின் தாயார் வீட்டுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என அறியமுடியவில்லை. இது குறித்த விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-7,104)

# நல்லூர் ஆலய வளாகத்தில் பால் தேநீர் ரூபாய் 200

## பொது மக்கள் குற்றச்சாட்டு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக உள்ள சைவ உணவகத்தில் ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழாவினை முன்னிட்டு திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்று நல்லூர் ஆலயத்திற்கு அருகில் தனது கிளை நிறுவனம் ஒன்றினை நேற்றையை தினம் ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை கொடியேற்ற உற்சவத்துக்கு சென்ற மக்கள் சிலர் அங்கு பால் தேநீர் பருக சென்ற போது ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவதாக தெரிவித்தனர்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் கூட ஒரு கோப்பை பால் தேநீர் இவ்வளவு விலைக்கு விற்கப்படவில்லை என குற்றம் சாட்டும் மக்கள் இவ்வாறு அதிக விலையில் விற்பனை செய்வதை நுகர்வோர் அதிகார சபையினரும் கண்டு கொள்வதில்லை என குற்றம் சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு குறித்த உணவகத்தின் உணவு பொருட்களின் விலைகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,33,104)

# 1000 மரக்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டம் யாழில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நிலை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில், பருவகால மாற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக 1000 மரக்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் 1000 மரக்கன்றுகள் நடும் செயற்திட்டம் நேற்று யாழ்ப்பாணம் செம் மணிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மரம் ஒன்று வளர்ப்போம் வரும் சந்ததியினருக்கு வளம் கொடுப்போம் என்ற தொனிப் பொருளில் இந்த மரநடுகை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை யின் செயலாளர் இ.பகீரதன் தலை மையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடமாகாண உள்ளூராட்சிஆணையாளர் எஸ்.பிரணவநாதன், உள்ளிட்ட சமூக அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம-7)

# மின்சாரம் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பெல்லன்வில ரஜமகா விகாரையில் இடம்பெற்ற இறுதி ரந்தோலி பெரஹெறவை பார்வையிட சென்ற பெண்ணொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீதியின் இருபுறமும் மின் விளக்குகளை அலங்கரித்த ஒப்பந்ததாரரின் பாதுகாப்பற்ற செயற்பாடுகளே விபத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பெல்லன்வில ரஜமஹா விகாரையின் இறுதி ரந்தோலி பெரஹெற கடந்த சனிக்கிழமை இரவு வீதி உலா வந்தது. வழக்கம் போல் வீதியின் இருபுறமும் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்த நிலையில் பெரஹெறவை காண வந்த பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அத்திடிய பிரதேசத்தில் வசித்து வந்த 67 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

# யாழில் போதையை ஊசிமூலம் எடுத்த இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் ஐஸ் போதைப் பொருளை ஊசி மூலம் எடுத்துக் கொண்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

26 வயது மதிக்கதக்க இளைஞனே யாழ்ப்பாணம் மாநகர் கொட்டடியில் உள்ள அவரது வீட்டில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திய தந்தையார் வெளிநாடு சென்ற நிலையில் தாயாருடன் வாழ்ந்து வந்த இளைஞன்போதைக்கு அடிமையாகி இருந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


2ம் ஆண்டு நினைவு



தோற்றம் 13 . 02 . 1950

மறைவு 12 . 09 . 2021

அமரர் வடிவேலு பரராசசிங்கம்

பெற்றவர் தம்மை நித்தமும் நேசித்து
போற்றியே மனதில் இறையாய் பூசித்து
நற்றவ நெறியை நாளும் போதித்து
அற்புத வாழ்வை அளித்த அருளே!

வரந்தரும் வள்ளல் அருளினைத் தேடியே
பரம்பொருள் பதந்தனை பற்றிட நிதமும்
விரைந்தே வாசலில் வீழ்ந்து எமக்காய்
இரந்திருந் தாயே எங்கள் கோவே!

காய்ந்திடும் நிலவென கருணை காட்டி
பாய்ந்திடும் நதியென பாசமும் ஊட்டி
ஓய்ந்திடும் வரையும் ஓயா துழைத்தாய்
சாய்ந்திடும் போதில் எமையேன் மறந்தாய்!

மின்னும் ஒளியாய் திகழ்ந்தாய் தினமும்
பொன்னும் உனக்கு ஈடேதும் இல்லை
கண்ணும் பட்டதோ கடிதெனப் போனாய்
இன்னும் இருட்டில் துடித்தல் போமோ!

ஆண்ட எங்கள் அன்பின் தலைவன்
ஆண்டுகள் இரண்டு போயும் இங்கு
வேண்டுதல் ஒன்றே வேறிங்கு இல்லை
ஆண்டவா அவரை எம்மிடம் அனுப்பு?

(C-7108)

தகவல்
குடும்பத்தினர்


# துப்பாக்கியால் சுட்டு ஒருவர் படுகொலை

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு, இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை சம்பவம் நேற்று பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந் தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிசூட்டுக்கு இலக்கான நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் கஸ் கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# கட்டுநாயக்கவில் பெண் ஒருவர் கைது

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆடைகளுக்குள் 4 கடவுச்சீட்டுகளை மறைத்து வைத்திருந்த பெண் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

இந்த கைது நடவடிக்கை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் புத்தளம் - கல்பிட்டி பகுதியைச் சேர்ந்த 48 வயதான வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர்நேற்று அதிகாலை 04.41 மணியளவில் சென்னையில் இருந்து ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்தடைந்துள்ளார். (ம-7)

## சண்டி...

யுள்ளதுடன்மோட்டார்சைக்கிள்களுக்கு தீ வைத்து அட்டகாசம் புரிந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியூர் சென்றிருந்த நிலையில் இளைஞர் ஒருவர் மட்டும் தனிமையில் இருந்துள்ளார். இந் நிலையில்வன் முறைக் கும்பல் வீட்டுக்குள் நுழைவதை அவதானித்த இளைஞன் அயல் வீட்டுக்கு தப்பி ஓடியுள்ளார்.

பின்னர் வீட்டுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டில் இருந்த உடமைகளை சேதப்படுத்தியதுடன் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியதுடன் வீட்டின் முன் நிறுத்தப் பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் தீ வைத்து கொழுத்தியுள்ளது. (ம-7,33,104)

## பாராளு...

ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட நிதியங்களுக்கு விதிக்கப்படும் பல மில்லியன் கணக்கிலான வரி காரணமாக, அந்த நிதியங்களின் அங்கத் தவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக அந்த மனுவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்போம்

## பௌத்தர்களுக்கு உதயகம்மன்பில அழைப்பு

**(கொழும்பு)**

**வடக்கு, கிழக்கில் சிங்களவர்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமெனின் தமிழ் எம்.பிக்களை எதிர்த்து, அவர்களின் வீடுகளை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடுவோம். இதற்கு சிங்கள பௌத்தர்கள் அனைவரும், இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.**



குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனவாத கொள்கையுடைய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருந்தூர் மலைக்கு சென்று அரங்கேற்றிய நாடகத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

குருந்தூர் விகாரை 2200 ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

குருந்தூர் மலையை சூழ்ந்த பகுதிகளில் புராதன தொல்பொருள்கள் பௌத்த உரிமையை பறைசாற்றுகின்றன.

விகாரை பௌத்தர்களுக்கு சொந்தமானது என்பது சந்தேகத்துக்குரியதொரு விடயமல்ல ஆனால்

குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கும் அங்கு இந்து கோயில் இருந்ததற்கும் எவ்வித தொல்பொருள் சான்றுகளும் கிடையாது.

விகாரையில் உள்ள தூண்களில் ஒரு தூண் வட்ட வடிவில் உள்ளது. இந்த தூண் சிவலிங்கம் என்று குறிப்பிட்டு முறையற்ற தர்க்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு குருந்தூர் மலை இந்துக்களுடையது என்ற போலியான தர்க்கத்தை முன்னிலைப்படுத்தி பௌத்தர்களுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் இடமளித்துள்ளது. ஆனால் பௌத்த மரபுரிகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய பௌத்தர்களுக்கு இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

தமிழ் அடிப்படைவாதிகளின் நாடகத்துக்கு இடமளித்தால் பௌத்தர்களின் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு அரசாங்கம் கோழைத்தனமாக இருக்கலாம். ஆனால் பௌத்தர்கள் கோழைத்தனமாக இருக்க மாட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் வேண்டியதை செயலாம் என்ற நம்பிக்கை உள்ளதால் தமிழ் அடிப்படைவாதிகள் பௌத்த மரபுரிமைகளை அழிக்கிறார்கள்.

கொழும்பில் உள்ள இந்து கோயில்களுக்கு நாங்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகிறோம். தேசிய நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை நாங்கள் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

கொழும்பில் இருந்து கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களை இனவாத செயற்பாடுகளில் ஈடுபட தூண்டிவிடும் வரிசையில் பொன்னம்பலம், சுமந்திரன், சம்பந்தன் உள்ளிட்ட அனைவரும் உள்ளடங்குகிறார்கள்.

தெற்கில் இவர்கள் வாழ்வதற்கு உள்ள சுதந்திரத்தை வடக்கில் சிங்களவர்களிடமிருந்து பறிப்பதற்கும் தடையேற்படுத்துவதற்கும் இவர்களுக்கு தார்மீக உரிமையில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

அந்த கோரிக்கையை முன்வைக்க எமக்கு உரிமை உண்டு. ஆகவே சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க இந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வசிக்கும் வீட்டின் முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இந்த போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

# பஸ் ஜன்னலுக்கு வெளியே தலை வைத்த மாணவன் உயிரிழப்பு!

## சுற்றுலா சென்ற வேளை சோகம்

(நுவரெலியா)

கல்விச் சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தில், மாணவர் ஒருவர் ஜன்னலுக்கு வெளியே தலையை வைத்ததால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருமஸ்ஸால மலையை நோக்கி செல்லும் வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்தின் பின் இருக்கையில் பயணித்த மாணவன் ஜன்னலுக்கு வெளியே தலையை வைத்ததால், மின் கம்பத்தில் தலை மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த மாணவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உடுபத்தாவ, குளியாபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (நி)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்களின் செல்லுபடிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் 6 மாதங்களுக்குப் பின்னரும் செல்லுபடியாகும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஆவணங்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்ற முந்தைய விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளதாக குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வழங்கப்பட்ட எந்தவொரு சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இருந்தால், புதிய நகலை பெற வேண்டிய அவசியமில்லை என்றும் திணைக்களம் தெரிவிக்கிறது.

இது தொடர்பில் பதிவாளர் நாயகம் திணைக்களம், கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு மற்றும் ஆட்கள் பதிவு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

எனினும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே புதிய நகலை சமர்ப்பிக்க வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கின்றது. (நி)

# 30 முதல் 45 வயதானவர்களை அதிகம் தாக்கும் மாரடைப்பு

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

30 வயது முதல் 45 வயது வரை உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டிலிருந்து இந்த வயதினருக்கு மாரடைப்பு படிப்படியாக அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வயதுக்கு இடைப் பட்டவர்களுக்குத் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பே சிலர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சில மருத்துவமனைகளுக்கு மாதந்தோறும் 10 முதல் 15 வரையான மாரடைப்பு நோயாளிகள் வருவதாக கூறப்படுகிறது. இவர்களில் 90 சதவீதம் பேர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கமான உணவு முறையின்மை, உடற்பயிற்சியின்மை, புகைபிடித்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை, மன உளைச்சல் போன்ற காரணங்களால் மாரடைப்பு ஏற்படுவதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும், மாரடைப்பு நோயாளிகளின் அதிகரிப்புக்கு ஒரு குறிப்பிட்ட காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்றும் உடல் நோயியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

# கச்சதீவை மீட்கும் வழக்கை துரிதப்படுத்துமாறு வலியுறுத்து

## அ.தி.மு.க மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

கச்சதீவை மீட்டெடுக்கும் வகையில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை துரிதப்படுத்த தி.மு.க அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என அ.தி.மு.க தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க பொன்விழா எழுச்சி மாநாடு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் திருக்குறளை மத்திய அரசு தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 32 தீர்மானங்களும் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா பிறீமியர்லீக்

# முதல் தடவையாக சம்பியன் பட்டம் வென்றது கண்டி அணி




லங்கா பிரீமியர் லீக் இருபது- 20 தொடரின் இறுதிப் போட்டியில், தம்புள்ளை அவுரா அணியை வீழ்த்தி பி-லவ் கண்டி அணி முதல்முறையாக சம்பியன் கிண்ணத்துக்கு முத்தமிட்டுள்ளது.

கொழும்பு-ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்றுள்ள தம்புள்ளை அவுரா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை அவுரா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தனஞ்சய டி சில்வா 40 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் சதுரங்க டி சில்வா 2 விக்கெட்டுகளையும் நுவான் பிரதீப் மற்றும் மொஹமட் ஹஸ்னெய்ன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 148 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பி-லவ் கண்டி அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பி-லவ் கண்டி அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக கமிந்து மெண்டிஸ் 44 ஓட்டங்களையும் மொஹமட் ஹரிஸ் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் நூர் அஹமட் 3 விக்கெட்டுகளையும் பினுர பெனார்டோ 2 விக்கெட்டுகளைய்யும் வீழ்த்தினர். (6)

# ஆசிய கிண்ண போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு இன்னும் 45 நாட்களே உள்ள நிலையில், அதற்கு முன்பாக 6 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணத் தொடர் ஓகஸ்ட் 30 முதல் செப்டெம்பர் 17 வரை நடக்கவுள்ளது. இந்நிலையில் 6 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணத் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இளம் வீரர் திலக் வர்மா இடம் பிடித்துள்ளார். வழக்கம் போல சஞ்சு சாம்சன் இடம் பெறவில்லை. இந்திய வீரர்கள் விவரம்:- ரோகித் சர்மா, சுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், கேஎல் ராகுல், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, இஷான் கிஷன், அக்சர் படேல், ஜடேஜா, ஹர்திக் பாண்டியா, சர்துல் தாகூர், பும்ரா, ஷமி, சிராஜ், குல்தீப் யாதவ்.பிரதிஷ் கிருஷ்ணா. ரிசர்வ் வீரராக சஞ்சு சாம்சன் உள்ளார். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2895

லதுர்ஷ்





நந்தினி




கணேஷ்




சந்தியா




ராம்




பிரதாப்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசியின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் அரிசிக்கு தட்டுப் பாடு ஏற்படாவிட்டாலும் எதிர் வரும் காலங்களில் சந்தை யில் அரிசியின் விலை ஓரள விற்கு அதிகரிக்க வாய்ப்புள்ள தாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.

அம்பலாந்தொட்டை நெல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சொந்தமாக பயிர் நிலங்களில் விளைந்த சிறுபோக பயிர் களை அறுவடை செய்யும் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

வறட்சி காரணமாக ஒரு இலட்சம் ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ள போதிலும், எதிர்காலத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது நெல் கையிருப்பு தனியார் வசம் இருப்பதாக அமைச்சர் குறிப் பிட்டார்.

தனியார் துறையில் நெல் கிடைப்பதால் அரிசியின் விலை உயரும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுப்பதுடன் நுகர்வோரையும் பாதுகாக் கும் வேலைத்திட்டத்தை அர சாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அமைச் சர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் பொழுது அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று விகித அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 316 ரூபா 72 சதமாக பதிவாகியுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 316 ரூபா 28 சதமாக காணப்பட்டது.

அத்துடன் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 329 ரூபா 59 சதமாக பதிவாகியுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 329 ரூபா 49 சதமாக காணப்பட்டது. (நி)

# 50 ஆயிரம் ஏக்கர் காணிகள் வறட்சியால் பாதிப்பு-விவசாய அமைச்சு

(கொழும்பு)

நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக 50,000 ஏக்கர் விவசாய காணிகள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

உடவலவ பிரதேசத்தில் மாத்திரம் ஏற்பட்ட சேத விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கு 5 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)




# இராசிபலன்

22.08.2023
ஆவணி 05, செவ்வாய்க்கிழமை
சஷ்டி முன்னிரவு 11.19 மணிவரை

சுவாதி பின்னிரவு 5.19 மணிவரை
சுபநேரம் -10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை

சந்திராஷ்டமம்-ரேவதி.

வளவன்

**மேஷம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு, தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மகரம்** வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும் தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், உங்களின் வார்த்தைகளைப் பலரும் கேட்டு நடப்பார்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.


**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்


**மீனம்** வரவும் செலவும் சமமாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

இளமை முதுமையை நோக்கி விரைகிறது. இன்பம் துன்பத்தை நோக்கி விரைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது .பெருமளவான பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு அங்கப் பிரதட்சணம் உட்பட பல்வேறு நேர்த்திகளில் ஈடுபட்டனர்.

படங்கள்- சிவசாந்தன்




# சூழலை சுத்தப்படுத்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(அராலி)

வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது பிரதேசங்களை சுத்தமாக வைத்திருக்க விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனும் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக நேற்று விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் குறித்த திட்டம் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தியிலே கழிவுத்தொட்டிகள் வைக்கும் நிகழ்வு ஆளுநரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆயிரம் மரங்களை நாட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது மரம் செம்மணிச் சந்தியிலே ஆளுநரினால் நாட்டி வைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டங்கள் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக அந்தந்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்களுடன் இணைந்தே செயற்படுத்தப்படவுள்ளன. அந்தவகையில் கழிவுத்தொட்டிகளை வைக்கும் நிகழ்ச்சித் திட்டத்திலே கழிவுத்தொட்டிகளுக்கு பொறுப்பாக கடை வியாபாரிகள் செயற்படவுள்ளனர். அதே போல் இந்த வேலைத் திட்டங்கள் முழுவதும் பொதுமக்களின் ஒத்துழைப்போடு அவர்களுடன் இணைந்து செயற்படுவதாகவே காணப்படும் என உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6-104)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 23 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இசை அரங்கு இடம் பெறவுள்ளது.

இதன்போது பாட்டு- ஸ்ரீ சந்திர மௌவிகரசர்மா, வயலின்- ப.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம்- மு.சுலக்சன், மோர்சிங் -நி.மோகனதர்சன் ஆகியோர் இணைந்து இசைக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம் பெறவுள்ள இசை அரங்கில் பாட்டு- ஜெய பாரதி கௌசிகன், வயலின் -ப. சியாம் கிருஷ்ணாவும், மிருதங்கம்- ஞா. வசந்தும் மோர்சிங் -நி. மோகனதர்சன் ஆகியோர் இணைந்து இசைக்கவுள்ளனர். (நி-6)

# போதைப் பொருளுடன் மூவர் சாவகச்சேரியில் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடம் இருந்து தலா 40 மில்லிகிராம் ஹெரோயினும், 30 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்ப டுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-30)

## திருக்குட நன்னீராட்டு ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணைக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோயில் திருக்குட நன்னீராட்டு ஆறாம் ஆண்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

காலை 7 மணிமுதல் 11 மணிவரையுள்ள சுப வேளையில் 108 சங்குகள் கொண்டு திருக்குட நன்னீராட்டு இடம் பெறவுள்ளது. (6)

# கர்நாடக சங்கீத வித்துவான் கிருஷ்ணாவின் நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

பிரபல கர்நாடக சங்கீத வித்துவானும் எழுத்தாளரும் செயற்பாட்டாளருமான ரி. எம் கிருஷ்ணா எழுதிய "மறைக்கப்பட்ட வரலாறு" என்ற நூலுக்கான அறிமுகம் செய்யும் கருத்தரங்கம் நாளை புதன் கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம் பெறவுள்ளது.

உலகெங்கும் அண்மைக் காலங்களில் பேச ப்படுகின்ற இசை வரலாறு சமூகவியல் .மானுடவியல் சார் ஆய்வு நூலான இதைப்பற்றி நான்கு வாசிப்புக்கள் முன்வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் ரி.எம். கிருஷ்ணா கலந்து கொள்ளவதுடன் சில பாடல்களையும் பாடுவதுடன் அவரின் நூல் பற்றிய வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பார். (நி-6)

## வரம் தா நல்லூர் வடிவேல் முருகா!

நல்லூர் கந்தா நலமே வாழ வரந்தா
ஆறுமுக வேலா நோயில்லா வரம் தா
கலியுக வரதா கண்ணியமாய் வாழ வரம் தா
கார்த்திகேயா கவலை இல்லா வரம் தா
பன்னிருகையா பகை இல்லா வரம் தா
திருப்புகழ் தெய்வமே தமிழ்வாழ வரம் தா
மனம் நிறைந்த மயுரேசக் கடவுளே
மன அமைதிக்கு வரம் தா!

செல்வரதி சரவணபவன்
பிளவத்தை

## நல்லைக் கந்தன்

நல்லூர்க் கந்தா
வேலாயுதா
கார்த்திகேயா சரணம்

உன்னை நாடி வந்தேன்
தேடி வந்தேன் ஒருவரம்
அருள்வாய் சரணம்

சரணம் சரணம்
சரவண பவனே
சரணம் முருகா சரணம்

வேலணையூர்
ராகவி

## உன் வதனமதை காட்டிட வா

நல்லூர் பதிதனிலே
அரசாட்சி புரியும் முருகா
உனை நாடி வரும்
அடியவர்க்கு அருள்புரிய
உன் திருமுகத்தை
காட்ட தினமும் வாராயோ!

அளவையூர்
அருட்செல்வன்

# 'யாழ் முயற்சியாளர்-2023' விற்பனைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் யாழ் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் "யாழ் முயற்சியாளர் 2023" என்னும் விற்பனைக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம். நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ள அக் கண்காட்சியினை பார்வையிட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்ப தோடு தரமான உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ் மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 73 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 28 வீதமாக குறைந்துள்ளது

(கொழும்பு)

73 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 28 வீதமாக குறைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் எட்டு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் அடியாக குறைந்துள்ளதாக நீர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்ஷனி விதானபத்திரன தெரிவித்தார். (நி)

# 'சொர்க்கத்தின் சுமை' மலையகக் கதைகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவிலிருந்து மலையகத்துக்கு தோட்டத் தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையும் கலை வட்டமும் இணைந்து "சொர்க்கத்தின் சுமை மலையாக கதைகளின் காட்சியை நாளை புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் காட்சியை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நுண் கலைத்துறை கலைக்கூடத்தில் பார்வையிட முடியும்.

இக் காட்சியின் தொடக்க நிகழ்வில் பிரபல கர்நாடக இசைப்பாடகர் ரி.எம்.கிருஷ்ணா.பிரபல தமிழக எ்ழுத்தாளர் பெருமாள் முருகன், வரலாற்றாசிரியரும் ஆய்வாளருமான பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி மற்றும் காலச்சுவடு வெளியீட்டக உரிமையாளர் கண்ணன் சுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# உலகின் மிகப்பெரிய எலி தெஹிவளை மிருகக்காட்சிசாலையில்

(கொழும்பு)

உலகின் மிகப் பெரிய கொறித்துண்ணிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட எலி தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது.

ஸ்லோவாக்கிய மிருகக் காட்சிசாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு ஜோடி கேபிராக்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் காட்சிப்படுத்தப்படும் என தெஹிவளை மிருகக் காட்சிசாலையின் பணிப்பாளர் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்தார்.

தண்ணீருக்கு அருகில் வசிக்கும் இந்த கேபிரா தனது சுவாசத்தை நீருக்கடியில் சுமார் ஐந்து நிமிடங்கள் வைத்திருக்கும் திறன் கொண்டது என்றும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

கேபிராஸ் தாவரவகைகள் மற்றும் குழுக்களாக வாழ விரும்புகின்றன. விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் படி இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு அவை கிடைக்கப்பெற்றன. ஒரு மாத தனிமைப்படுத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு அவை காட்டப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 480 | 400 |
| தக்காளி | 180 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 250 |
| கரட் | 350 | 460 | 450 | 450 |
| பூசணி | 80 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 150 | 180 | 160 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 300 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 240 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 250 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 160 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 400 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | - | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 450 | 450 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 120 |

# குளவிக்கொட்டுக்கு இலக்கான சிறுவன் உயிரிழப்பு மேலும் மூவர் வைத்தியசாலையில்

(நுவரெலியா)

நுவரெலியா - பம்பரக்கலையில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 16 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பம்பரக்கலை பகுதியில் விறகு சேகரிப்பதற்காக சென்ற நான்கு சிறுவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகினர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பின்னர் நான்கு பேரும் சிகிச்சைச்சைகளுக்காக நுவரெலியா பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துத்ள்ளது. (நி)

# ரணில்- மஹிந்த இடையே கொழும்பில் இரகசிய சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவும் அண்மையில் இரகசியமாகச் சந்தித்து உரையாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சந்திப்பு கொழும்பு- சங்கிரில்லா உணவகத்தில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் இளைய மகன் அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்றும் மகிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷ அதற்கு எதிர்ப்பு வெளியிட்டார்.என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பாராளுமன்ற அமர்வின்போது மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபைக்குள் உரையாடிக் கொண்டிருந்த போது

ராஜபக்ச குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான எம்.பி. ஒருவரே ரணிலும் மகிந்தவும் இரகசியமாகச் சந்தித்து உரையாடிய தகவலை அம்பலப்படுத்தியுள்ளார் என தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 25 பழைய வட்டாரம் 01 காரைதீவு வீதி ஆதன இலக்கம் 140 எமது ஆதனப் பதிவேட்டில் முருகேசு இளையவன் என்ற பெயரில் காணப்படுகிறது.

குறித்த ஆதனம் முருகேசு இளையவர் பிரசித்த நொத்தாரிசு மாரிமுத்து சோமசுந்தரம் முகதாவில் 14.08.1943 ஆம் திகதியிட்டு 399 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை இளையவன் செல்லையாவுக்கு கைமாற்றியுள்ளார்.

பின்னர் இளையதம்பி செல்லையா பிரசித்த நொத்தாரிசு M.M.சுல்தான் முகதாவில் 05.02.1956 ஆம் திகதியிட்டு 2783 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை பெண் வேலாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனம் வைரவன் கோதன் கைம்பெண் சிறீனி பிரசித்த நொத்தாரிசு சுப்பையாப்பிள்ளை இராசையா முகதாவில் 13.02.1955 ஆம் திகதியிட்டு 490 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர்தம்பிப்பிள்ளைக்கு கைமாற்றியுள்ளார். குறித்த ஆதனத்தை கொத்தர்தம்பிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு சுப்பையாப்பிள்ளை இராசையா முகதாவில் 28.12.1958 ஆம் திகதியிட்டு 723 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை தம்பிப்பிள்ளை வெள்ளாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை கைம்பெண் வெள்ளாச்சி பிரசித்த நொத்தாரிசு கணபதி சிவலிங்கம் முகதாவில் 15.12.1971 ஆம் திகதியிட்டு 959 ஆம் இலக்க அறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை அறுதியாக தம்பிப்பிள்ளை கந்தசாமிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மக்கள் வங்கி பிரசித்த நொத்தாரிசு ஜெயவர்த்தனன் முகதாவில் 11.02.1980ஆம் திகதியிட்டு 106 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை கைம்பெண் வெள்ளாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை தம்பிப்பிள்ளை கந்தசாமியும் பெண் கனகம்மாவும் பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா முகதாவில் 2.10.2016 ஆம் திகதியிட்டு 2820 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி மகள் தயாளினுக்கு வீஸ்தீரணம் நெற்பரப்பு 02 கொண்ட ஆதனத்தை கைமாற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பான பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/81 கிராமசேவகர் பிரிவில் உள்ள "பள்ளுவிலி தோட்டம்" நெற்பரப்பு 01 [பதிவு D266/8] மற்றும் நெற்பரப்பு 01 (பதிவுD386/213) இவை இரண்டும் ஒன்றாக்கி நெற்பரப்பு இரண்டு வீடும் கிணறும் இந்த நெற்பரப்பு 2 இற்கும் எல்லை.

கிழக்கு- டாக்டர் பாரதியின் ஆதனம்
வடக்கு- இளையவன் பெண் வள்ளியின் ஆதனம்
மேற்கு- றோட்டு
தெற்கு - டாக்டர் பாரதியின் ஆதனம் இதடங்கலும்

தற்போது கந்தசாமி மகள் தயாளினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆணைங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி மகள் தயாளினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல ஏன்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி-7105)

ஆணையாளர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 184

### கற்றுக்கொண்ட கல்வி அறிவு ஒருநாளும் வீண்போகாது

பாரிஸ் நகரில் ரயில் நிலையம் அருகில் ஒருமுறை ஒரு பயங்கர வெடிகுண்டுசம்பவம் நடந்தது.

தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் அனைவரும் தப்பித்தனர்.

ஆனால் அவர்களுடன் இந்த செயலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்த ஒரு பயிற்சி நாய் மட்டும் பொலிஸார் வசம் சிக்கி கொண்டது.

ஆனால் அந்த நாயை வைத்துக்கொண்டு பொலிஸாரால் துப்புத்துலக்க முடியவில்லை. காரணம் அதற்கு எந்தமுறையில் எந்தமொழியில் பயிற்சிகொடுக்கப்பட்டது என்ற விபரம் அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை.

உதாரணத்திற்கு, யானைக்கு சமஸ்கிருத மொழி விளங்கும் என்று பலரும் சொல்ல கேட்டதுண்டு அதைப்போல ஒரு ஹிந்திக்காரன் வீட்டில் வளரும் நாய் பைட்டோ பைட்டோ என்றால் உட்கார்ந்து கொள்ளுமாம். இதைப்போல,

எப்படியாவது இந்த நாயை வைத்தே குற்றவாளிகளின் இருப்பிடத்தை கண்டறிந்து அவர்களை கைது செய்ய முடிவெடுத்தனர்.

எல்லாரும் முயற்சி செய்து ஒரு வழியாக ஒரு பன்மொழி கலைஞரை அழைத்தனர். அவருக்கு 60 மொழிகள் வரை அத்துப்படி. அவர் ஒரு புரப்பெஸரும் கூட அவரும் வந்து வித விதமான மொழிகளை பேசி முயற்சி செய்தும் பயன் இல்லை. அந்த நாயிற்கும் ஒன்றும் புரியவே இல்லை. கடைசியில் பழம்பெரும் மொழிகளில் ஒன்றான ஹிப்ரு என்ற மொழியில் அவர் பயிற்சியை துவக்கியதும் நாய்க்கு புரிய ஆரம்பித்தது.

உடன் அதை வைத்து குற்றவாளிகளின் இருப்பிடம் கண்டு உடன் கைது செய்தது பாரீஸ் பொலிஸ். அந்த புரப்பெஸருக்கு பாராட்டுக்கள் குவிந்தது. அவருக்கு பாரீஸ் அரசாங்கம் ஏகப்பட்ட விருதுகளை அள்ளித்தர முடிவு செய்தது. பெரிய விருந்து ஒன்றையும் ஏற்பாடு செய்தது விருந்தில் அவரிடம் கேட்கப்பட்டது

உங்களால் பாரிஸ் பெருமை அடைந்தது. உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் வழங்க படும் என்றனர். பணம் வேண்டுமா? விலை கூடிய கார்கள் வேண்டுமா? மாளிகை வேண்டுமா? அரசாங்க பணிகள் வேண்டுமா? என்று ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

எனக்கு உதவியாக இருந்த அந்த நாயை மட்டும் தயவு செய்து எனக்கு வழங்கிவிடுங்கள் என்றார். அதை கேட்டு அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியம். சிலர் இவருக்கு பைத்தியம் என்றனர்.

ஒரு அதிகாரி கேட்டார். ஏன் அந்த நாயை வைத்து நீங்கள் என்ன செய்ய முடியும் என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு அவர் சொன்னார் இந்த நாயை என் வீட்டிற்க்கு கொண்டு போய் என் மனைவி முன் நிறுத்தவேண்டும். ஏன் என்றால் நான் கஷ்டப்பட்டு இந்த பல மொழிகள் படிக்க முயலும் போதெல்லாம் அவள் சொல்வாள்.

"எந்த நாய் இதை கேட்க போகுதுன்னு இதையெல்லாம் படிக்கிறீங்கன்னு அதுக்காக தான். இதை கொண்டு போகணும் என்றார்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## கலிபோர்னியாவில்

# ஒரே நேரத்தில் தாக்கிய பூகம்பமும் புயலும்

(வோஷிங்டன்)

கலிபோர்னியா நகரை சூறாவளியும் பூகம்பமும் ஒரே நேரத்தில் தாக்கியுள்ளன. ஹிலாரி சூறாவளி தாக்கத்தொடங்குவதற்கு சற்று முன்னர் கலிபோர்னியாவை பூகம்பம் (5.1) தாக்கியுள்ளது.

நகரில் அதனை உணர முடிந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹிலாரி புயல் தற்போது தென்கலிபோர்னியாவை நோக்கி நகர்ந்துள்ளது. மணிக்கு 85 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதாக தெரிவித்துள்ள அதிகாரிகள் பேரழிவு.



உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய வெள்ளம் குறித்து எச்சரித்துள்ளனர்.

மெக்சிக்கோவின் பசுபிக் கரையோரமும் மழையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்க டென்மார்க் மற்றும் நெதர்லாந்து அரசாங்கம் ஒப்புதல்



(கீவ்)

நெதர்லாந்தில் இருந்து எப்-16 போர் விமானங்களை பெற்றுக்கொள்வதற்காக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டேவை சந்தித்துள்ளார்.

உக்ரைன் இராணுவத்திற்காக நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட அதிநவீன போர் விமானம் அமெரிக்காவின் ஒப்புதலுடன் நாட்டை வந்தடைந்துள்ளதாக குறித்த சந்திப்பின்போது ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் உக்ரைனுக்கு எப்-16 விமானங்களை வழங்க தீர்மானித்துள்ளதாக டென்மார்க் மற்றும் நெதர்லாந்து ஆகிய அரசாங்க ஒப்புதல் வழங்கியிருந்தன.

இதன் பிரகாரம் இரு நாடுகளும் தற்போது உக்ரைனுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளன.

இதற்கமைய உக்ரைனுக்கு ஆதரவு வழங்க நெதர்லாந்து மற்றும் டென்மார்க் அரசாங்கங்கள் ஒரு கூட்டணியில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் விமானிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகள் இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என டென்மார்க் பாதுகாப்பு அமைச்சர் ஜாகோப் எல்லெமன்-ஜென்சன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வார தொடக்கத்தில் டென்மார்க் மற்றும் நெதர்லாந்து தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் அந்தோனி பிளிங்கன் இந்த ஒப்புதலுக்கான விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 7 பாடசாலைகள் ஆயுதக்குழுவின் கட்டுப்பாட்டில்-ஐ.நா எச்சரிக்கை

(பெய்ரூட்)

மிகப்பெரிய பாலஸ்தீன அகதிகள் முகாமான ஐன் அல் - ஹெல் வேயில் ஆயுதம் ஏந்திய குழுவினர் 7 பாடசாலைகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா.விவகார அலுவலகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக அந்த பாடசாலைகளை விட்டு வெளியேறுமாறு ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இந்திய பிரதமர் இன்று தென்னாபிரிக்கா விஜயம்

(பிரிட்டோரியா)

தென்ஆப்பிரிக்காவில் நடைபெற்ற 15 ஆவது பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மோடி இன்று தென் ஆப்பிரிக்கா புறப்பட்டு செல்கிறார்.

அங்கு அவர் தென்ஆபிரிக்கா, சீனா, பிரேசில் நாட்டு தலைவர்களுடன் சந்தித்து பேசவுள்ளார். அத்துடன் மாநாட்டில் முக்கிய உரையாற்றவும் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# பேருந்துடன் நேருக்கு நேர் மோதியதில் வெடித்துச் சிதறியது எரிபொருள் தாங்கி

## குழந்தைகள் உட்பட 21 பேர் சாவு

### பாகிஸ்தானில் துயரம்

**(இஸ்லாமாபாத்)**

**பஞ்சாப் மாகாணத்தில் டீசல் ஏற்றி வந்த கொள்கலனும் பயணிகள் பேருந்தும் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**



கராச்சியில் இருந்து இஸ்லாமாபாத்திற்கு நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் 40 பயணிகளுடன் பேருந்து சென்றது.

அப்போது, பேருந்து எதிரில் வந்த டீசல் கொள்கலன் பேருந்து மீது பயங்கரமாக மோதியதில் தீ பிடித்து டீசல் கொள்கலன் வெடித்து சிதறியது. இதனால், பேருந்துக்குள் இருந்த பயணிகள் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர், பேருந்தில் சிக்கியிருந்தவர்களை மீட்டனர். இதில் 21 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், 16 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சிலரின் உடல்நிலை மோசமாக இருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# கொரோனா வைரஸின் திரிபு பிரித்தானியாவில் கண்டுபிடிப்பு

(லண்டன்)

உலகில் கொரோனா வைரஸ் மாறுபாடு பரவ ஆரம்பித்துள்ள நிலையில், அதன் திரிபானது பிரித்தானியாவிலும் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அதற்கமைய புதிய கொரோனா வைரஸினுடைய மாறுபாடானது பீ.ஏ. 2.86 அல்லது பைரோலா என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், புதிய வைரஸின் தாக்கம் குறித்து தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைரஸானது தனது புரத அமைப்பில் 30 மாறுபாடுகளைக் கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாக வேகமாக பரவக்கூடும் என்பதுடன், ஏற்கனவே வழங்கப்பட்ட தடுப்பூசியின் தாக்கத்தை தாண்டி தொற்றை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# இராணுவ நெருக்கடிக்கு அமைதி வழியில் தீர்வு

## போப் பிரான்சிஸ் வேண்டுகோள்



(நியாமி)

நைஜரில் இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்ததாக அந்நாட்டு இராணுவம் அரசு தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தது.

இராணுவத்தின் இந்தச் செயலுக்கு ஐ.நா.சபை மற்றும் சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்தன.

இதற்கிடையே, நைஜரின் புதிய இராணுவ ஆட்சிக்கும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பான எகோவாஸ் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வார இறுதியில் நடந்த பேச்சுக்கள் சிறிதளவு முன்னேற்றத்தை அளித்துள்ளது என கூறப்படுகிறது.

இந்நிலையில், மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் இராணுவ புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

மேலும் அனைவரின் நலனுக்காகவும் கூடிய விரைவில் அமைதியான தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினார். (நி-5)

# பாகிஸ்தானில் திடீர் குண்டு வெடிப்பு 13 தொழிலாளர்கள் உடல் சிதறிப் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடக்கு பகுதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் 13 தொழிலாளர்கள் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டின் வடக்கு வர்ஜிஸ்தான் பகுதியில் உள்ள இராணுவ சாவடியில் தொழிலாளர்கள் கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது திடீரென ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 13 தொழிலாளர்கள் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்ததுடன் 2 பேர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவத்திற்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பெற்கவில்லை.

குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள் தெற்கு வஜிரிஸ்தானில் உள்ள மக்கின் மற்றும் வானா தெஹ்சில் பகுதியை சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வழக்கு பதிவு செய்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023



எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காணும் துலாம் இராசி வாசகர்களே!




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் இருக்கிறார்கள். மேலும் இம்மாதம் மீண்டும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் வரப்போகிறது. எனவே ஆரோக்கியத் தொல்லையும் அதிக விரயங்களும் ஏற்படலாம். மீண்டும் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம், தொழில் மாற்றம் போன்றவை வந்துசேரலாம். எதிரிகளின் பலம் கூடும் என்பதால், எதையும் யோசித்து செய்வது நல்லது.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசி நாதனாகவும் 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். அவர் தொழில் ஸ்தானத்திற்கு வரும்போது மாற்றங்கள் உருவாகும். கைநழுவிப் போன ஒப்பந்தங்கள் மீண்டும் வந்து சேர்வதோடு, புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து எதிர்காலம் பற்றி முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே இடமாற்றமும் இலாகா மாற்றமும் வரலாம். விலை உயர்ந்த வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன - சப்தமாதிபதியான செவ்வாய், விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது விரயங்கள் அதிகரிக்கும். சுப காரியங்களுக்காக செலவிடுவது நல்லது. வாங்கிய சொத்துகளை விற்க நேரிடும். அதில் வரும் ஆதாயத்தைக் கொண்டு பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக செலவிடுவீர்கள். தொழில் பங்குதாரர்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். இருப்பினும் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்வது பற்றி யோசிப்பீர்கள். பாகப்பிரிவினை சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன் தரும்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். வாக்கிய கணித ரீதியாக வரும் இந்த மாற்றத்தில், உங்கள் இராசிக்கு சனி பகவான், அர்த்தாஷ்டமச் சனியாக வருகிறார். சுமார் 4 மாதங்களே மகரத்தில் சஞ்சரிக்கும் சனியால், பண நெருக்கடி அதிகரிக்கும். பல காரியங்கள் தடையாக நிற்கும். நடக்கும் தொழிலில் பங்குதாரர்களோடு ஏற்பட்ட பிரச்சினையால் தடைபட்டு நிற்கக்கூடும். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். ஒருசிலர் பணி மாற்றம் செய்ய முன்வருவர்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். பாக்கிய ஸ்தானாதிபதி வக்கிர நிவர்த்தியாவது நன்மைதான். படிப்படியாக தடைப்பட்ட காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும்.

பணப் புழக்கமும், சுபவிரயங்களும் அதிகரிக்கும். சொத்து விற்பனையால் லாபம் உண்டு. சொந்தங்கள் உதவிக்கரம் நீட்டுவர். எதிர்காலத்தைப் பற்றிய கவலை அகலும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளைக் கொடுப்பர். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

தொழில் செய்பவர்களுக்கு பலத்த போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சலுகைகள் கிடைத்து சந்தோஷமடைவர்.

கலைஞர்களுக்கு கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் வரலாம். மாணவ -மாணவிகளுக்கு ஆசிரியர்களின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும்.

பெண்களுக்கு விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்ற சிந்தனைகள் மேலோங்கும். பணி புரியும் இடத்தில் சகப் பணியாளர்களால் வரும் தொல்லைகளை சமாளிக்க வேண்டிய சூழல் உருவாகும்.

## எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சாதனைகள் நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறும் விருச்சிக இராசி வாசகர்களே!




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் நான்கு கிரகங்களுடன் கூட்டாக இணைந்து கூட்டுக்கிரக யோகத்தை உருவாக்குகிறார். எனவே தொழில் வெற்றி நடைபோடும். வருமானம் உயரும். வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். அர்த்தாஷ்டமச் சனி இம்மாதம் விலகுவதால் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு வருவது நல்லதுதான். புதிய ஒப்பந்தங்கள் வந்த வண்ணமாகவே இருக்கும். அதிக முயற்சி செய்யாமலேயே சில காரியங்கள் அடுத்தடுத்து முடிவிற்கு வந்துவிடும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணம் வாங்கும் யோகம் உண்டு. வீடு, வாகனம் வாங்குவது பற்றியும் சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த தலைமைப் பதவிகள் இப்பொழுது கிடைக்கலாம்.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு வருவதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். 6 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் உத்தியோகத்தில் இருந்தபடியே ஒரு சிலருக்கு சுயதொழில் செய்யும் வாய்ப்பு கைகூடும். ஒருசிலர் உத்தியோகத்தில் இருந்து விலகி சுய தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து நல்ல சம்பளம் தருவதாகச் சொல்லி அழைப்புகள் வரலாம்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கமாக செல்கிறார். வாக்கிய கணித ரீதியாக வரும் இந்த மாற்றத்தால் மிகுந்த நற்பலன்கள் கிடைக்கும். அர்த்தாஷ்டமத்தில் இருந்து விலகி, சகாய ஸ்தானத்திற்கு சனி வருகிறார். எனவே இதுவரை எவை எவையெல்லாம் நடைபெறாமல் இருந்ததோ, அவையெல்லாம் துரிதமாக நடைபெறும். வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை இனி சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். பொருளாதார நிலை உச்சம் பெறும். சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் நட்பு பலப்படும்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு லாபாதிபதியாக விளங்கும் புதன், வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். கொடுக்கல்- வாங்கல்களில் சரளமான நிலை உருவாகும். வருங்காலத்தைப் பற்றிய பயம் அகலும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கலாம்.


ஆரோக்கியத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கியப் புள்ளிகள் மூலம் முன்னேற்றம் கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நிதி நிறுவனங்களின் மூலம் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். கலைஞர்களுக்கு வருமானமும், வாய்ப்புகளும் வந்து கொண்டே இருக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகளும், அதற்கேற்ற ஊதியமும் கிடைக்கும்.

## பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைவீர்கள்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சருக்கு எதிராக புதுக்குடியிருப்பிலும் கையெழுத்து வேட்டை



(நெளுக்குளம்)

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு வலு சேர்க்கும் கையெழுத்துப் போராட்டமும் விழிப்புணர்வு நடவடிக்கையும் முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட வழி வகுத்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை மாற்றி மருந்து தட்டுப்பாட்டிற்கு தீர்வு காணுங்கள் எனக் கூறி சபாநாயகர் இடம் கொடுக்க உள்ள மனுவுக்கு வலு சேர்க்கும் கையெழுத்துப் போராட்டமும் துண்டு பிரசுர விழிப்புணர்வு நடவடிக்கையும் புதுக் குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதன்போது நாட்டின் பொது மக்களின் சுகாதார சேவையின் பாதிப்பு தொடர்பான துண்டு பிரசுரம் அங்கு வருகை தந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களிடமிருந்து கையெழுத்து பெறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் முத்துகுமாரசாமி லக்சயன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையில் புது குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சத்தியசுதர்சன் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கையெழுத்து வைத்து தங்கள் ஆதரவை தெரிவித்தனர். (நி-6-299)

# முல்லைத்தீவில் தீக்கிரையான தமிழ் மீனவர்களின் படகுகள்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு தண்ணி முறிப்பில் தமிழ் மீனவர்களின் 4 படகுகள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் முழுமையாக எரித்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.


தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்ற அப்பகுதியை சேர்ந்த மீனவர்களின் படகுகளே இவ்வாறு எரிக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பும் தண்ணி முறிப்புகுள பகுதியில் வைத்து 6 படகுகள் தீக்கிரையாக்கப் பட்டிருந்தது. இவ்வாறு மீனவர் களின் படகுகள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும் எனவும் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

# மலையக மக்களால் பல எல்லைக் கிராமங்கள் சிங்கள மயமாக்கலில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது

## செல்வம் எம்.பி



(முல்லைத்தீவு)

மலையக மக்களாலேயே வடக்கில் பல எல்லைக் கிராமங்கள் தற்போது சிங்கள மயமாக்கலிலிருந்து பாதுகாக்கப்படுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு" எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கின் பல எல்லைக் கிராமங்கள் தற்போதும் தக்க வைக்கப்பட்டிருக்கின்றமைக்கு, அந்த எல்லைக் கிராமங்களில் குடியேற்றப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மலையக மக்களே காரணமாகும்.

மலையக மக்களாலேயே பல எல்லைக்கிராமங்கள் தற்போது சிங்கள மய மாக்கலில் இருந்து பாதுகாக் கப்படுகின்றது.

இடங்கள்தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பங்களிலே மலையக மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள் என அவர் தெரிவித்தார்.

மேலும் மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும், போராடுவதும் வட, கிழக்கு தமிழ் மக்களின் கடமை எனத் தெரிவித்தார்.

வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் உர்வுகளாலும், மொழியாலும் நாம் ஒன்றுபட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6-299)

# சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுபடும்

## பொன்னாவெளி மக்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியின் பொன்னாவெளியில் சுண்ண க்கல் அகழ்வுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டம் நேற்று 19 ஆவது நாளாகவும் முன்னெடு க்கப்பட்டது.

மாவட்டத்தின் உயர் அதிகா ரிகள் மக்களின் போராட்டத்திற்கு உரிய பதில்களை வழுங்காத தன் காரணமாக தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு ள்ளனர். சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகும் அபாயம் உள்ளது.

ஏற்கனவே பொன்னாவெளி நாகமுனை பகுதியில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் உடைப் பெடுத்த நிலையில் உவர்த் தடுப்பணை காணப்படும் நிலையில் இது மீண்டும் புனரமைக் கப்படாத நிலையில் பொன்னா வெளி கிராமம் உவர் நிலமாக மாறி உள்ள நிலையில் சுண் ணக்கல் அகழ்வு நடைபெற்று கடல் நீர் உட்புகுமானால் 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலம் உவர் நிலமாக மாறும். கால் நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் இல்லாமல் போகும்.

மேலும் கிராமங்கள் முழு மையாக அழிவடையும் நிலையினைத் தடுப்பதற்காகவே சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என மக்கள் தெரிவித்தனர். (நி-6-350)


## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

1. The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of ward 24, Medical ward front & Back, Dialysis unit corridors & Ramp, Dialysis unit Toilet Renovation, Modification as Bone Marrow Transfusion unit in Rehabilitation center & JICA lab work Top tiling. | 2000.00 | 84,000.00 | 91 | 4.2 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 23.08.2023 up to 06.09.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 07.09.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.** (C-7107) **21.08.2023.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

262





மான் கூட்டத்தைப் பார்த்ததும் பூங்குழலிக்கு உற்சாகம் உண்டாயிற்று. அவற்றைப் பிடிக்கப் போவதுபோல் தொடர்ந்து குதித்து ஓடினாள். ஆனால் என்னதான் விரைவாக ஓடினாலும் மான்களோடு போட்டியிட முடியுமா? மான் கூட்டம் பூங்குழலியை முந்திக் கொண்டது.

முன்னால் சென்ற மான்கள் ஓரிடத்தில் நாலு கால்களையும் தூக்கி வானத்தில் பறப்பது போல் நீண்ட தூரம் தாவிக் குதித்தன. அங்கே புதை சேற்றுக் குழி இருக்கிறதென்று பூங்குழலி ஊகித்துக் கொண்டாள். பெரிய மான்கள் எல்லாம் அக்குழியை ஒரே தாண்டலில் தாண்டி அப்பால் பத்திரமாய் இறங்கிவிட்டன. ஆனால் மான்குட்டியினால் முழுவதும் தாண்ட முடியவில்லை. அக்கரை ஓரமாக அதன் பின்னங் கால்கள் சேற்றுக் குழியில் அகப்பட்டுக் கொண்டன. முன்னங் கால்களைக் கரையில் ஊன்றி மான் குட்டி ஆன மட்டும் கரை ஏற முயன்றது. ஆனால் அதன் பின்னங்கால்கள் சேற்றில் மேலும் மேலும் புதைந்து கொண்டிருந்தன. தாய் மான் கரையில் நின்று குட்டியின் நிலையைக் கவலையுடன் நோக்கியது. அதனால் தன் குட்டிக்கு உதவி எதுவும் செய்ய முடியவில்லை.

இதையெல்லாம் ஒரு நொடியில் பார்த்து அறிந்து கொண்ட பூங்குழலி அந்தப் புதை சேற்றுக் குழி எங்கே முடிகிறது என்பதைக் கண்டு தெரிந்து கொண்டாள். புதைகுழி ஓரமாக ஓடிச் சென்று கெட்டியான இடத்தின் வழியாகக் கடந்து எதிர்ப்புறத்தில் மான் குட்டி சேற்றில் அகப்பட்டுக் கொண்டு தவித்த இடத்தை அணுகினாள். தாய் மான் முதலில் அவளைக் கண்டு மிரண்டது. பூங்குழலிக்கு மானின் பாஷை தெரியும் போலும்! மிருதுவான குரலில் அவள் ஏதோ சொல்லவும் தாய் மான் பயம் நீங்கி நின்றது. பூங்குழலி புதை சேற்றுக் குழியின் கரை ஓரத்தில் முன்னங்கால்களை மடித்து உட்கார்ந்து, கைகளை நீட்டி மான் குட்டியைப் பற்றிப் பலமாக இழுத்துக் கரையேற்றினாள்.சில விநாடி நேரம் அந்த மான்குட்டியின் உடம்பு வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. தாய் மான் அதனருகில் நின்று முகர்ந்து பார்த்துத் தைரியம் கூறியது போலும்! அவ்வளவுதான்! அடுத்த விநாடி தாயும், குட்டியும் மீண்டும் பாய்ந்தோடின.

"சீ! கொஞ்சமும் நன்றியில்லாத மிருக ஜன்மங்கள்!" என்று பூங்குழலி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். "ஆனால் மனிதர்களை விட இந்த மான்கள் மட்டமாய்ப் போய்விடவில்லை!" என்று அவளே தேறுதலும் சொல்லிக் கொண்டாள்.

பிறகு மறுபடியும் குழகர் ஆலயத்தை நோக்கி நடந்தாள்.

மணல் வெளியைத் தாண்டியதும் மரஞ்செடிகள் அடர்ந்த காட்டு வழியில் போக வேண்டியிருந்தது. மேட்டில் ஏறியும், பள்ளத்தில் இறங்கியும் போக வேண்டியிருந்தது. அந்தக் காட்டை இயற்கையின் விசித்திரங்களில் ஒன்று என்றே சொல்ல வேண்டும். அங்கே கற்பாறைகளினால் அமைந்த மலைகளோ, குன்றுகளோ இல்லை. ஒரே மணல் வெளிதான். ஆங்காங்கு மணல் மேடு, மணல் மேட்டின் மீது செடிகளும், மரங்களும் முளைத்ததினால் கெட்டிப்பட்டுக் குன்றுகளாகவே மாறிப் போயிருந்தன. குன்றுகளுக்குப் பக்கத்தில் பள்ளங்களும் இருந்தன. அத்தகைய காட்டில் வழி கண்டுபிடித்துப் போவது எளிய காரியமன்று. வெகு தூரம் நடந்துவிட்டது போலத் தோன்றும் ஆனால் திரும்பத் திரும்பப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருப்போம்!

பூங்குழலி அந்தக் காட்டு வழியில் புகுந்து அதி விரைவாக நடந்து ஆலயத்தினருகே வந்து சேர்ந்தாள். கோவிலுக்கு வெளியிலும், உட்பிரகாரத்திலும் கொன்னை, பன்னீர் முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து மலர்ந்து குலுங்கிக் கொண்டிருந்தன. பூங்குழலி ஆலயத்துக்குள் போனாள். பட்டர் அவளைப் பார்த்து முகமலர்ந்தார். அந்தக் கோயிலுக்குள் சாமி தரிசனம் செய்வதற்காக வருவோர் அருமை. ஆதலின் அருமையாக வருகிறவரைப் பார்த்துப் பட்டர் மகிழ்வது இயல்புதானே?

தேங்காய் மூடியும், பிரசாதமும் கொண்டு வந்து பட்டர் கொடுத்தார். (தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### சாகாத வரம்



வையாபுரி பட்டினம் என்ற நகரம் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்தது.

வையாபுரி பட்டினத்தில் முத்து வியாபாரி மாணிக்கத்தை தெரியாதவர் இருக்க முடியாது. மாணிக்கத்தின் வீடு அரண்மனையைப் போல விசாலமாக இருக்கும்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு முத்து, ரத்தினம், வைரம் என்று மூன்று மகன்கள்.

இவர்களில் பெரியவன் முத்து வெளிநாடுகளில் வியாபாரம் செய்து பெரும்பொருள் ஈட்டினான்.

அவன் தம்பி ரத்தினமும், வைரமும் உள்ளூர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டனர்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு ஒரு நாள் திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போனது. தான் இறந்து விடுவோம் என்று தோன்றியது. சொத்துக்கள் அனைத்தையும் உள்ளூரில் இருக்கும் தனது மகன்களிடம் ஒப்படைத்து விட்டு இறந்துபோனார்.

பேராசை கொண்ட ரத்தினமும், வைரமும் அப்பாவின் சொத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டு அண்ணன் முத்துவை கொலை செய்ய திட்டமிட்டனர். ஒரு நாள் அண்ணன் முத்து திரும்பி வந்தான். அவனிடம் சொத்துக்களை மூன்றாக பிரித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

அண்ணனும் தம்பிகள் சொன்னதை நம்பினான். ஆனால் அன்று இரவே முத்துத் தூங்கிக்கொண்டிருக்கும் போது அவனை அடித்து ஒரு குளத்தில் வீசி எறிந்தனர்.

அடுத்த நாள் அந்த குளக்கரையில இருந்த கோவிலின் எதிரில் படுத்துகிடந்தான் முத்து. ஆனால் அவன் உடம்பில் எந்த விதமான காயமும் இல்லை.

தூங்கி எழுந்த முத்து தனக்கு முன்னால் கடவுள் பிரத்யட்சமாய் தோன்றியிருப்பதைக் கண்டு வணங்கினான்.

"என்ன நடந்தது?" என்றார் கடவுள். நடந்ததைச் சொன்னான் முத்து.

"இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது. 400 ஆண்டுகள் வரை நீ வாழ்வாங்கு வாழ்வாய்." என்று வரமளித்து விட்டு கடவுள் மறைந்தார்.

முத்து வீட்டிற்குத் திரும்பினான் ரத்தினமும் வைரமும் அதிர்ச்சியடைந்தனர்.

"காலையில் உங்களைக் காணாமல் துடித்துப் போனோம் உங்களைப் பார்த்த பின்னர் தான். எங்களுக்கு உயிரே வந்தது" என்று சொல்லி அழுதனர். "என்ன நடந்தது" என்று கேட்டனர்.

எதையும் மறைத்துப் பேசத் தெரியாத முத்து நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொன்னதுடன், 400 ஆண்டுகள் சாகாமல் வாழ பெற்ற வரத்தையும் பற்றி கூறினான். தாங்களும் இதே போல் அதிக ஆண்டு வாழவேண்டும் என்று திட்டமிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க் கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். ~ பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி ரணில் வழிபட்ட மடுத் திருப்பதி சைவக் கோயிலாக இருந்திருந்தால்...

சைவ சமயத்துக்காக குரல் கொடுப்பவர்களை கூலிகள் என்று கூறுகின்ற அளவில் தமிழ் அரசியல்வாதிகள் வந்துவிட்டனர்.

இவ்வாறு கூறுபவர்கள் சைவ சமயத்தவர்களேயன்றி கத்தோலிக்கர்களோ அன்றி ஏனைய சமயத்தவர்களோ அல்ல என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், ஈழத்தில் சைவ சமயத்தை அழிப்பதில் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்ற தகவல்கள் பரவலாகப் பேசப்படுகின்றன.

அதிலும் சைவ சமயம் சார்ந்தவர்களே இந்த வஞ்சகத்தைச் செய்கிறார்கள் என்ற உண்மை மிகவும் வேதனைக்குரியது.

தவிர, இலங்கையில் சைவ சமயம் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்படுகிறது. சிவாச்சாரியர்களை எவரும் மதிப்பதில்லை.

அலுவலகங்களுக்கு சைவ சமயம் தவிர்ந்த எந்த மதத் தலைவர்கள் சென்றாலும் அவர்களுக்கு ஏகப்பட்ட மரியாதை.

ஆனால் சிவாச்சாரியார்கள் வரிசையில் காத்து நிற்கின்ற பரிதாபம்.

இதுமட்டும்தான் என்றால் இல்லை. ஒரு புறத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க சைவ ஆலயங்களை பௌத்த சிங்களம் ஆக்கிரமிக்கிறது.

மறுபுறத்தில் மதமாற்றக்குழுக்கள் சைவக் கடவுளைச் சாத்தான்கள் என்று கூறி ஏழை மக்களை ஏமாற்றி மதம் மாற்றுகின்றன.

இதற்கும் மேலாக, பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் மடைவாதம் பிடித்தவர்களால் எந்நேரமும் சிதைக்கப்படும் ஆபத்தில் உள்ளது.

ஆம், தனது நுழைவாயிலில் ஒரு வளைவு கட்டுவதற்குக் கூட முடியாமல் ஆதிச் சமயமாகிய சைவம் தளர்ந்து கிடக்கிறது.

ஆனால் திருக்கேதீச்சர ஆலய பரிபாலன சபையில் இருக்கின்ற இருவர், கடந்த பொதுத் தேர்தலில் கத்தோலிக்க சமயம் சார்ந்தவர்களை ஆதரித்து அறிக்கை விட்டனர். இவையெல்லாம் எப்படிச் சாத்தியமாகிறது.

அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மன்னாரில் நத்தார் திருநாளில் படையினருக்காக விசேட பூசை நடைபெறும்.

எனினும் சைவ சமயப் பற்றாளர்களை அரச கூலிகள் என்று கூறுவோர் இதனை ஒருபோதும் கண்டித்ததும் இல்லை கண்டதும் இல்லை.

இராணுவத் தளபதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் பாராட்டு விழா நடக்கும். அதில் சைவம் தவிர்ந்த ஏனைய மதகுருமார் பற்கேற்று ஆசி வழங்குவர்.

ஆனால் ஒரு சிவாச்சாரியார் பங்குபற்றினால் அவரின் கவசனத்தைக் களைந்தெடுக்க நம் அரசியலில் ஆள் உண்டு. ஆனால் அந்தப் பாராட்டு விழா பற்றி வாய் திறக்க மாட்டார்கள் அந்தக் கனவான்கள்.

ஏன் இப்போது கூட மடுத் திருப்பதியில் ஜனாதிபதி ரணில் பங்கேற்று உரையாற்றினார்.

இதே மடுத் திருப்பதி ஒரு சைவ ஆலயமாக இருந்திருந்தால் அவ்வளவுதான் சிவாச்சாரியார்கள் துரோகிகள். ஆலய தர்மகர்த்தாக்கள் வஞ்சகர்கள் என்று வசை பாடுவர்.

நல்ல காலம் மடுத் திருப்பதி ஒரு கத்தோலிக்க தேவாலயம் என்பதால் கூலிப் பட்டம் கொடுப்போர் மௌனமாக உள்ளனர்.

என் செய்வது ஏன் தான் இவர்கள் சைவ சமயத்துக்கு ஈனம் செய்கிறார்கள். இது பற்றி நம் தமிழ் இளைஞர்கள் ஆராய வேண்டும். இங்கு தமிழ் இளைஞர்கள் என்பது எங்கள் கத்தோலிக்க சகோதரர்களையும் உள்ளடக்கியது.

ஆம், நீங்களும் ஒரு சமய நிந்தனைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் வலிமை பொருந்தியவர்கள்.

# இலங்கையில் வேகமாக பரவிவரும் போதையைக் கட்டுப்படுத்த விசேட குழு

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வேகமாகப் பரவிவரும்போதைப் பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொறிமுறைகளைக் கண்டறிந்து அதன் அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கும் இலங்கையில் போதைப்பொருள் அச்சுறுத் தலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அண்மையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை பொலிஸ், தேசிய ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை ஆகியன குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு, நாட்டில் போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தத் திணைக்களங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

இதற்கமைய பாரியளவிலான போதைப் பொருள் நாட்டிற்குள் வருவதை நிறுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அண்டை நாடுகளின் புலனாய்வு அமைப்புகளும் இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், புகையிலை மற்றும் மதுபான பாவனையை குறைப்பதற்கு எடுக்கக்கூடிய பல ஆலோசனைகளை குழுவிடம் முன்வைத்தனர்.

மேலும், போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை செயற்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த கெப் பள்ளத்தில் பாய்ந்ததில் எழுவர் காயம்

(நுவரெலியா)

நானுஓயா - கிரிமிட்டி பகுதியில் கெப்ரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

பிலியந்தலை பகுதியிலிருந்து நுவரெலியாவுக்கு பயணித்த கெப்ரக வாகனமொன்று நேற்று முற்பகல் விபத்துக்குள்ளாகியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேக கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## பாம்புக் கடிக்கிலக்கான பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(பசறை)

பசறை-கோணக்கலை கீழ்பிரிவு தோட்டத்தில் பணிபுரிந்த பெண்ணொருவர் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளார்.

பசறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கோணக்கலை கீழ்பிரிவு தோட்டத்தில் பணிபுரியும் தோட்ட தொழிலாளியொருவரை கடந்த 16ஆம் திகதி பாம்பு தீண்டியிருந்தது.

குறித்த பெண் சிகிச்சைகளுக்காக பசறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி 56 வயதான கந்தன் முத்துலட்சுமி என்ற குறித்த பெண் உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம், அம்பகாமம் மொபிட்டல் கோபுரம், டயலொக் கோபுரம்-ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம்வேலி வயல் வீதி, பெரிய புளியங்குளம் (தட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதியநகர் (தட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்டமுறிப்பு) ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வாகன விபத்தில் தாய்-மகள் பலி

(அனுராதபுரம்)

அநுராதபுரம் - விலாச்சி வீதியில் உள்ள கதிரேசன் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டுபேர் பலியாகினர்.

பாரவூர்தி ஒன்றும், உந்துருளி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் உந்துருளியில் பயணித்த 36 வயதான பெண்ணும், 9 வயதான அவரது மகளும் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## இலங்கையின் பணவீக்கம் ஜூலையில் மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம், கடந்த ஜூலை மாதம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதம் 10.8 சதவீதமாக பதிவான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம், ஜூலை மாதம், 4.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் 2.5 சதவீதமாக காணப்பட்ட உணவு பணவீக்கம் ஜூலை மாதத்தில், மறை 2.5 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

ஜூன் மாதத்தில் 18.3 சதவீதமாக பதிவான உணவல்லா பணவீக்கம் ஜூலை மாதம் 10.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7)

### அடையாளம் காணப்படாத நோயால்

## காலி சிறைச்சாலையில் இரு கைதிகள் உயிரிழப்பு

(காலி)

அடையாளம் காணப்படாத நோய் நிலைமை காரணமாக காலி சிறைச்சாலையில் கைதிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 05 கைதிகள் நோய்வாய்ப்பட்ட நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த தொற்று நிலை கண்டறியப்படவில்லை எனவும், மருத்துவர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதற்காக சிறைச்சாலையில் முகக்கவசம் பயன்படுத்தப்படுவதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

12



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1977 இல் இலங்கை திறந்த பொருளாதாரமாக மாறியதில் இருந்து, இலங்கையின் முதல் நிறைவேற்று ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தன காலத்தில் இருந்து இலங்கையின் ரூபாவின் பெறுமதி பெருமளவு வீழ்ச்சியடைந்தே வந்துள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 7 இலிருந்து 32 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 350% இலும் கூடவாகும். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 32 இலிருந்து 47 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 43% இலும் கூடவாகும். ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 47 இலிருந்து 49 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 4% இலும் கூடவாகும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 49 இலிருந்து 102 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 107% இலும் கூடவாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 102 இலிருந்து 131 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 28% இலும் கூடவாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 131 இலிருந்து 171 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 30% இலும் கூடவாகும். ஜனாதிபதி கோத்தாபயா ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஒரு அமெரிக்க டொலருக்கான ($) இலங்கை ரூபா 171 இலிருந்து 366 ரூபாவாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 114% இலும் கூடவாகும்.

### இலங்கையின் அந்நிய செலவாணியாக இந்திய ரூபா

இந்திய ரூபாயில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக்கு 2022ஆம் ஆண்டு மே மாதம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. அதாவது இலங்கையுடனான வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான தீர்பபனவுகளை, இந்திய ரூபாவில் மேற்கொள்ள இந்திய மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இதனூடாக, ஆசிய கணக்குத் தீர்வக ஒன்றியத்தின் பொறிமுறைக்கு அப்பால், இந்திய ரூபாவில், தீர்ப்பனவுகளை மேற்கொள்ள இலங்கைக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்திய ஏற்றுமதியாளர்கள், இலங்கையுடன் முன்னெடுக்கும் வர்த்தக நடவடிக்கைகளின்போது எதிர்நோக்கும் சிக்கல் நிலையைக் கருத்திற்கொண்டு, இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளதாக இந்திய மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

### இந்திய நாணயத்தில் வர்த்தகம்

ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து உலகளாவிய வர்த்தகத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மற்றும் இந்திய நாணயத்தில் வர்த்தகத்தை ஆதரிப்பதற்காகச் சர்வதேச வர்த்தகத்திற்கான ரூபாயில் தீர்வு செய்யும் (Settlement) முறையை இந்திய ரிசர்வ் வங்கி திங்களன்று (2022-07-11) வெளியிட்டது.

இந்தப் புதிய முறையின் கீழ், ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் சிறப்பு வொஸ்ட்ரோ (Vostro) கணக்கைப் பயன்படுத்தி ரசீதுகள் மற்றும் பணம் செலுத்துவதை இந்திய ரூபாய் வாயிலாகச் செய்ய முடியும். இப்புதிய வர்த்தக முறை மூலம் இந்தியா ரஷ்யா உடன் இந்திய ரூபாய் வாயிலாக வர்த்தகம் செய்ய முடியும். (குறிப்பு- வொஸ்ட்ரோ கணக்கு என்பது ஒரு வங்கி மற்றொரு வங்கியின் சார்பாக வைத்திருக்கும் கணக்கு ஆகும்.)

இந்த புதிய சிறப்பு வொஸ்ட்ரோ (Vostro) கணக்கு கட்டமைப்பு மூலம் இந்தியா ரஷ்யாவிடம் இருந்து வாங்கும் அனைத்து பொருட்களுக்கும் இனி டொலர், யூரோ போன்ற நாணயங்களில் செலுத்தப்படாமல், இந்திய ரூபாயில் செலுத்தலாம். இதேபோல் இந்த கட்டமைப்பை அனுமதிக்கும் வெளிநாடுகளும் டொலர் இல்லாமல் இந்திய ரூபாயில் பொருட்களை வாங்கலாம்.

இந்த மாற்றத்துக்கான முக்கிய காரணம் சென்ற ஆண்டு இந்தியாவில் இருந்து பெருமளவில் பணம் வெளியேறும் நிலையில் இந்திய ரூபாய் மதிப்பு மிகப்பெரிய அழுத்தத்தில் உள்ளது. 2022 ஆம் ஆண்டு தொடங்கும் போது அமெரிக்க டொலருக்கு எதிராகச் சுமார் 74 இல் இருந்து, அது 6.7% குறைந்துள்ளது. தற்போது வர்த்தகத்தில் வரலாறு காணாத விதமாக 79.63 ரூபாய் வரையில் சரிந்ததுள்ளது. ரூபாய் மதிப்பின் சரிவை கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி டொலர்களை அதிகளவில் விற்றது, அந்நிய செலாவணி வரவுகளை அதிகரிப்பதற்காக கார்பரேட் பத்திர முதலீடுகள், குறுகிய கால முதலீடுகள் எனப் பல தளர்வுகளை அறிவித்தது.

நிச்சயமற்ற உலகப் பொருளாதாரம் மற்றும் அமெரிக்காவின் கொள்கை நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரே நாணயம் இந்திய ரூபாய் மட்டும் அல்ல. ஜப்பானிய யென், போலந்து ஸ்லோட்டி, சிலி பெசோ மற்றும் தாய் பாட் ஆகிய நாடுகளின் நாணய மதிப்பும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா-உக்ரைன் போருக்கு பின்பு இந்தியா தனது பொருளாதாரத்தில் அதிகப்படியான பணவீக்கத்தை உருவாக்கியுள்ளது.

உக்ரைன் போருடன் சேர்ந்து, அமெரிக்கா தனது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. இந்த நடவடிக்கை மூலம் அமெரிக்கச் சந்தை லாபம் அடைந்தாலும், டொலரை நம்பி வர்த்தகம் செய்யும் அனைத்து நாடுகளும் அதிகளவிலான சரிவை எதிர்கொண்டு உள்ளது. இது அமெரிக்காவின் தவறான கொள்கை கணிப்பினால் ஏற்பட்ட பாதிப்பு ஆகும்.

1970இற்கு முன் அரசாங்கத்தால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உற்பத்தி செய்யப்படும் பணத்திற்கு (ஒரு பகுதிக்காவது) தங்கத்தை கையிருப்பாக வைத்திருப்பர். ஆனால் 1970இற்கு பிறகு தங்க மாற்று என்பது பெருமளவு மறைந்து போனது. அரசு ஓரளவு தங்கம் மற்றும் அன்னிய பணங்களை கையிருப்பாக வைத்திருந்தாலும் அவை அச்சடிக்கப்படும் பணத்துடன் ஒப்பீடு செய்து பார்க்கும் போது அதன் மதிப்பு மிக குறைவே.

பிரச்சனை ஏற்படும் போது பணத்திற்கு ஈடாக தங்கம் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லாததால் அதிக அளவு பணத்தை அச்சிடுவதன் மூலம் பிரச்சனையை தீர்க்க முயல்கின்றது. இதனால் பணம் என்பது செல்வத்தை சேமிக்கும் ஒரு கலமாக இருந்த நிலை மாறத் தொடங்கி அரசாங்கங்கள் கொடுக்கும் நம்பிக்கையின் பத்திரமாக மட்டும் இருந்து அதன் மதிப்பும் குறைய தொடங்கி விட்டது.

### கடந்த சில ஆண்டுகள் பொருட்களின் விலையேற்றம்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் எல்லாப் பொருட்களின் விலைகளும் ஒட்டு மொத்தமாக அதிகமாவதில்லை. சில பொருட்களின் விலைகள் உயரும்போது, வேறு சில பொருட்களின் விலைகள் குறைவதும் உண்டு. நம் ஒவ்வொருவரின் நுகர்வு தன்மைக்கேற்ப சில பொருட்களின் விலையேற்றம் நம்மை அதிகமாக பாதிக்கும். எனவே ஒரு பொருளின் விலையேற்றம் எல்லோரையும் சமமாக பாதிப்பதில்லை.

பெட்ரோல் மற்றும் டீசல் பொருட்கள் போக்குவரத்தில் அதிகமாக பயன்படுத்துவதால், இவ்விலையேற்றம் நம் அனைவரையும் ஓரளவிற்கு பாதிக்கும் என்பதை உணர்கிறோம். நான் பொது பேருந்தை பயன்படுத்துபவனாக இருந்தால், அவ்வப்போது உயரும் பெட்ரோல் அல்லது டீசல் விலை என்னை அவ்வளவாக பாதிப்பதில்லை. மாறாக, அன்றாடம் தனியார் வாகனம் பயன்படுத்துவோரை இவ்விலையேற்றம் அதிகமாகவே பாதிக்கும். இந்த சூழலில்தான் விலையேற்றத்தை அளவிடும் முறை சிக்கலாக் இருக்கிறது.

ஒவ்வொரு பொருளின் விலையேற்றம் எவ்வளவு, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழுவின் (தினக்கூலித் தொழிலாளர்கள், மாத சம்பளம் வாங்குபவர் என்ற பல குழுக்கள்) நுகர்வை எவ்வாறு பாதிக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்து பொது விலை மட்டத்தின் உயர்வை கணக்கிடவேண்டும். இதற்காக பயன்படுவதே விலை குறியீடாகும். அதாவது பொது விலைமட்டம் என்பது ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் சராசரி விலையே பொது விலை மட்டம் ஆகும். பொது விலை மட்டம் ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் அளவீடு செய்யப்படுகிறது.

இதனைச் சிறிது விளக்கமாகக் கூறுவதாயின் குறிப்பிட்ட பண்டங்கள் அல்லது சேவைகளின் விலை அதிகரிப்பை (அல்லது குறைவை) விட பொதுவான விலைகளின் அதிகரிப்பில் (அல்லது குறைவில்) நாம் கூடுதலாக அக்கறையோடு இருப்பதால், பொது விலை மட்டத்தின் மாற்றங்களைக் காட்டுகின்ற ஒரு அளவீட்டைக் கண்டுபிடித்தல் அவசியமாகும்.

பொதுவிலை மட்டம் விலைச் சுட்டெண் எனப்படும் புள்ளி விபரக் கருவியினால் அளவிடப்படுகின்றது. இலகுவாகக் கூறுவதாயின், ஒரு விலைச்சுட்டெண் என்பது, தெரிவு செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள் அடங்கிய கூடையொன்றில் உள்ள விலைகளின் நிறையிடப்பட்ட சராசரி ஆகும்.

இங்கு நிறைகள் கூடையின் மொத்தப் பெறுமானத்தில் அதன் சார்புப் பங்கு பிரதிபலிப்பதைப் போன்று ஒவ்வொரு பொருளின் சார்பு முக்கியத்துவத்தையும் நிறைகள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

பல தமிழ் ஆசிரியருமான ஜீவரஞ்சினி (வயது-53) எனும் ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு கிளிநொச்சியிலிருந்து கணவருடன் உந்துருளியில் வட்டக் கச்சி நோக்கி பயணிப்பதற்காக கிளிநொச்சி நகர் ஏ9 வீதியில் காக்கா கடைச் சந்தியில் வட்டக்கச்சிக்கு திரும்பும்போது எதிர்பக்கம் வந்த காருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது படுகாயமடைந்த ஆசிரியர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7,315,316)

## குப்பைக்குள்...

வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் தனது வீட்டில் உள்ள சுமார் 8 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப்பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் அவரது வீட்டை சுத்தம் செய்கின்றபோது குறித்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று மண்டுவில் வட்டாரத்தில் வழமையான கழிவகற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது குறித்த வீட்டில் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதார தொழிலாளர்களால் அகற்றப்பட்டு உழவு இயந்திரத்தில் நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான குப்பைகள் தரம் பிரிக்கின்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கொட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீட்டிலிருந்த நகைகள் காணாமல்போனதையடுத்து நிலைமையை உணர்ந்த உரிமையாளர் குப்பைகளோடு நகைகளும் வீதியில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களை சோதனையிட்டுள்ளார்.

அப்பொழுது நேற்றுக் காலை அப்பகுதியில் நகராட்சி மன்ற கழிவகற்றும் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தமை அவதானித்துள்ளார்.

இதையடுத்து உடனடியாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சென்று பிரதம நிர்வாக அதிகாரி செ.அனுசியா விடம் நிலைமை தொடர்பாக தெரியப் படுத்தியுள்ளார்.

இதையடுத்து உடனடியாக செயற்பட்ட நகராட்சிமன்ற நிர்வாக அதிகாரி மற்றும் நகராட்சி மன்ற சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்களான பா.தயாகரன் மற்றும் பா.நிஷாந்தன் ஆகியோர் நகராட்சி மன்ற கழிவு சேகரிக்கும் இடத்திற்கு வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளே இருந்து வெளியேயும் எவரையும் அனுமதிக்காத வண்ணம் செயற்பட்டு சுகாதார தொழிலாளர்களைக் கொண்டு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குடியிருப்பாளர் பழைய துணியில் கட்டி குப்பைகளோடு குப்பையாக வீதியில் வீசிய சுமார் 8 பவுண் நகைகள் குடியிருப்பாளரின் முன்னிலையிலேயே சுகாதார தொழிலாளியான சண்முகம் தமிழ்சனால் மீட்கப்பட்டு உடனடியாகவே உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,30,33,104)

## மன்னாரில்...

மன்னார் தலைமன்னார் வீதியில் கட்டுக்காரன் பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஹயஸ் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இதில் தலைமன்னாரை சேர்ந்த நிஷாத் என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தமிழீழ...

மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில், குருந்தூர் மலை விவகாரம் தொடர் பாக, வவுனியா ஸ்ரீ போதி தக்சனா ராமய விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விடயமானது, தொல்பொருள் திணைக்களத்திற்கு உரியது.

இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாடக் கூடாது.

சிங்கள பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது.

ஆனால், இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை.

தெற்கில், சம்பந்தமே இல்லாமல், சிங்கள பௌத்த கிராமத்திற்குள், கிறிஸ்தவ மத குருவோ அல்லது சைவ பூசகரோ சென்று, தங்கள் தளம் எனக்கூறி உரிமை கொண்டாடினால், சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா?

அவ்வாறிருக்கும்போது, தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர்மலை பகுதியில், பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால், தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்.

வணக்கஸ்தலங்கள், எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது.

சிங்கள பௌத்தம் என்றில்லாமல், நாங்கள் இலங்கையர்கள். யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு நாங்கள் சிந்திக்க வேண்டும்.

ஒரு சிலர் இந்த விடயத்தை அரசியலாக்கி, இனங்களுக்கு இடையிலான முறுகலை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்.

இவ்வாறான தொல்பொருள் இடத்தின் முழுப் பொறுப்பையும், தொல்பொருள் திணைக்களம் மட்டுமே எடுக்க வேண்டும்.

இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக் கூடாது என வலியுறுத்தப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில், நயினாதீவு ரஜமகா விகாரை விகாராதிபதி கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக் கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக் குளம் விகாராதிபதி சுமண திஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜூம்மா பள்ளி வாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரம் மஸ்ரீ பூ. முகுந்தன்சர்மா ஆகியோர் பங்கேற்றனர். (ம-7,250)

## ரணில்...

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

“தானும் அரசும் கவிழப் போகின்றதை ரணில் விக்கிரமசிங்க உணர்ந்து விட்டார். அதனால்தான் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமில்லை என்று அவர் உளறுகின்றார்.

மக்கள் ஆணை இல்லாத ஒருவர் எப்படி ஜனாதிபதி பதவியில் இருக்க முடியும்? மக்கள் ஆணையை இழந்த அரசு எப்படி ஆட்சியை தொடர முடியும்?

இலங்கையில் விசித்திரமான ஜனாதிபதி தலைமையிலான அரசு பதவியில் இருக்கின்றது.

மக்களை வதைக்கும் இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய ஆரம்பித்துள்ளார்கள். ரணில் - மொட்டு அரசை ஓட ஓட விரட்டியடிப்போம்” எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## வெப்பமான...

களுக்கும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உடலால் உணரப்படும் வெப்பமானது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு கவனம் செலுத்தும் மட்டத்தில் இருக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் இதன் மூலம் தெரிவித்துள்ளது. (ம-7)


மெகா பவர்
திகதி 21/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1561
W 09 07 14 71 74
40998

தன நிதானய
திகதி - 2023.08.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1243
F 30 32 52 70 F
38902

Lucky 7
திகதி 21.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0039
L7 இலக்கம் 2 9
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 8 9 5 9 2 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3455
சீட்டிழுப்பு திகதி 21.08.2023
G 09 45 57 67
G 71500

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.21
சீட்டிழுப்பு இலக்கம் 522
சிம்மம் 03 12 27 45 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/21
சீட்டிழுப்பு இலக்கம் 5213
U 8 6 6 3 8 1

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2013
சீட்டிழுப்பு திகதி : 2023.08.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,117,352/-
05 15 61 69 N
17 20 52 75 P

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2187
சீட்டிழுப்பு திகதி 2023.08.21
தினம் திங்கட்கிழமை
22 31 59 70 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,284,596.40
24 27 46 67 D

சனிதா
திகதி 2023.08.21 வெற்றி வாரம் 4348
17 36 38 65 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,963,976.00
09 23 53 64 A

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3899
சீட்டிழுப்பு திகதி 2023.08.21
வர்ணம் மஞ்சள்
தினம் திங்கட்கிழமை
28 36 45 55 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,259,628/-
20 24 38 58

கப்ருக
திகதி 21.08.2023 வெற்றி வாரம் 1363
V 15 36 37 45 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.430,755,404.20
05 24 57 63 J
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.08.21 வெற்றி வாரம் 1949 வர்ணம் செம்மஞ்சள்
13 20 32 65 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,544,595.20
28 38 41 50 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் துறையை திட்டமிட்டு அழிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித்**

(கொழும்பு)

சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சின் செயலாளரும் இணைந்து சுகாதாரத்துறையை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மருத்துவத் துறையில் உள்ள பல்வேறு சங்கங்களுடன் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழு நேற்று நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த கலந் துரையாடலில், கருத்து வெளி யிட்ட சஜித் பிரேமதாச அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துகளை ஒரே நேரத்தில் இறக்குமதி செய்து மக்களின் பணத்தை வீணடிக்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் நாட் டில் இயங்கிவரும் மருந் துப் பொருள் மாபியாவை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டிற்கு அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலான வெளிப்படையான, செயல்திறன் வாய்ந்த தேசியக் கொள்கை தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் செல்வாக்கு தவிர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், இதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள முடியுமான அதிகபட்ச போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (ம-7)


## பெயர் மாற்ற அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் தெற்கில் வசிக்கும் பாலசிங்கம் சகிலா எனும் பெயரை இன்று முதல் சசிலா என பெயர் மாற்றம் செய்கிறேன்.எனவே இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
பாலசிங்கம் சசிலா
(16782)

## கார் வாடகைக்கு

கிழமை,மாத அடிப்படையில் Altro,Renault கார் வாடகைக்கு உண்டு

(16794)

077 332 2433

## IELTS CLASSES

✍ IELTS ல் 5.0 ற்கு மேல் பெறமுடிய வில்லையா?

✍ 6.5 ற்கு மேல் பெற Zoom மூலமான ஒரு மாத துரித பயிற்சிகள் நாளை ஆரம்பம்

(16793)

IELTS Online

077 768 7821

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

- ❑ மனேஜர் Lanka Tile Showroom
  ஆண்; சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்
- ❑ Lanka Tile விற்பனையாளர் ஆண்
- ❑ விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- ❑ கணக்குப்பதிவாளர் ஆண்/ பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.

(C-7075)

குரு காட்வெயர்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
077 743 5265

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16759)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலை வாய்ப்பு

வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel and Indian Restaurant இற்கு வேலையாட்கள் தேவை.

(16781)

076 830 3931

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P:077 544 8503

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் ரோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16790)

076 057 0354, 076 826 0354

## விற்பனைக்கு

☞ 275 அடி நீளம் 135 அடி அகலம் கொண்ட அமானுச சீட் கொண்ட தகரக் கொட்டகை விற்பனைக்குண்டு.

☞ 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட அஸ்பெஸ்டஸ் சீட்கொண்ட 2 Set கொட்டகை விற்பனைக்குண்டு.

(16791)

077 882 8638

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் வாகனத்தில் சென்று உணவுப் பொருட்களை கடைகளுக்கு விநியோகிப்பதற்கு வேலையாட்கள் தேவை.

(16792)

076 986 5238

## வீடு விற்பனைக்கு

மருதனார்மடத்தில் இருந்து மானிப்பாய் செல்லும் வழியில் 500M தூரத்தில் றோட்டில் இருந்து 50M உள்ளே புதிய வீடு விற்பனைக்குண்டு.
புரோக்கர் (தரகர்) தேவையில்லை.

(16789)

தொடர்பு
077 959 5072

## தேவை

கொக்குவிலில் உள்ள தனியார் அலுவலகம் ஒன்றிற்கு கணினியில் தமிழ்/ஆங்கிலம் (Computer Typing Tamil/English) தட்டச்சு செய்யக்கூடிய ஓரளவு நல்ல ஆங்கில அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

(16788)

077 138 6601

## வேலை வாய்ப்பு

Rajapaksa Electricals (Pvt) Ltd.(AKRA) LED Lights நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

(16780)

அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

070 600 4427

## வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம் தெற்கு ஸ்டேசன் வீதயில் பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் செல்லும் ஒழுங்கையின் முகப்பில் அமைந்துள்ள மாடிக் கட்டடம் (6 அறைகள் உட்பட கூடங்களும் சமையலறையுடன் கூடிய வீடு, 1800 சதுர அடிக்கு மேலான விஸ்தீரணம்) கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

077 108 3363

(16786)

## WORK IN UK

WORK PERMITS

கட்டுமான தொழிலாளர்கள்

➤ 5 YEARS WORK PERMIT

✓ கட்டட தொழிலாளர்
✓ நீர்க்குழாய் பொருத்துனர்
✓ கம்பி கட்டுபவர்
✓ சட்டரிங் வேலை செய்பவர்
✓ தச்சுத்தொழிலாளர்
✓ எலெக்ரீசியன்



(C-7109)

போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

CIMS COLLEGE 0777-068-777

## CANADA

VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7099)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்னீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16790)

தொடர்புகளுக்கு:- குரு

077 874 3204, 077 288 0152, 077 076 0389

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நுணாவில் காப்பற் வீதி முகப்புடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

☞ A9 வீதியில் இருந்து கனகம்புளியடி சந்தி செல்லும் பிரதான காப்பெட் வீதி

☞ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், மட்டுவில் மகாவித்தியாலயம் 1 Km தூரம்

☞ குடியிருப்பு சூழல் கொண்ட தொகுதி

(16790)

077 638 5683
076 755 8606


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.